**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 04 ஆம் நாள் வியாழக் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 21ம் நாள்)**

**அசல் வழக்கு எண்.206/2019**
(CNR.No.TNTS07-000620-2019)
* * * * * * * *

1. கலாதேவி
2. மோகனகிருஷ்ணன் … வாதிகள்

/எதிர்/

1. சுப்பாராஜ்
2. சங்கரம்மாள்
3. சரளாதேவி
4. ராஜேந்திரன் ......பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 25.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.A.இசக்கிமாரிமுத்து மற்றும் திருமதி.எஸ்.உமாசுந்தரி அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.ஆர்.எஸ்.எஸ்.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், மேற்படியார்களை அழைத்தும் ஆஜராகாமல் இருந்து வந்ததால் மேற்படியார்கள் தோன்றா தரப்பர்களாக தீர்மானிக்கப்பட்டும், 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எம்.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இந்த வழக்கானது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 1/3 பாகத்தை நயமிதம் பார்த்து பிரித்து வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்**:-

தபசில் சொத்துக்களும் வேறு பல சொத்துக்களும் ஆதியில் கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களுக்கு பூர்வீகமாய் பாயத்தியப்பட்டது. கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பெருமாள்சாமி நாயக்கர், மாரிச்சாமி, 1, 2 பிரதிவாதிகள், வெங்கடசாமி ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படியார்கள் தாவா தபசில் சொத்துக்களை கூட்டாக பொது குடும்ப சொத்தாக ஆண்டனுபவம் செய்து வந்தனர். மேற்படி மாரிச்சாமி, வெங்கடசாமி ஆகியோர்கள் திருமணம் ஆகாமல் வாரிசுகளுமின்றி சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டனர். கிருஷ்ணசாமி நாயக்கர் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்த பின்பு மேற்படியாரின் மனைவி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் மற்றும் பெருமாள்சாமி நாயக்கர், 1, 2 பிரதிவாதிகள் ஆகியோர்கள் தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். பெருமாள்சாமி நாயக்கர் கடந்த 2002 ஆம் வருடம் மரணமடைந்த பின்பு தாவா தபசில் சொத்துக்களை மேற்படியாரின் சட்டப்படியான வாரிசுகளான மேற்படியாரின் மனைவி, வாதிகள். செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். பெருமாள்சாமியின் மனைவி கடந்த 2011 ஆம் வருடம் வாதிகளை மட்டும் சட்டப்படியான வாரிசுகளாக விட்டுவிட்டு மரணமடைந்துவிட்டார்.

2.2. பின்பு கடந்த 2015 ஆம் வருடம் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் மரணமடைந்த பின்பு வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் மட்டும் தாவா தபசில் சொத்துக்களை பொது குடும்ப சொத்தாக இந்நாள்வரை ஆண்டனுபவம் செய்து வருகிறார்கள். தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு 1/3 பங்கு பாத்தியமும், 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாத்தியமும் கூட்டாக

பாத்தியப்பட்டதாகும். இந்நிலையில் வாதிகள் தொழில் நிமித்தமாக வெளிமாவட்டத்தில் பணிபுரிந்த காரணத்தினால் தாவா தபசில் சொத்துக்களை கூட்டாக ஆண்டனுபவம் செய்வதில் பல்வேறு இடையூறுகள் ஏற்படவே வாதிகள் தாவா தபசில் சொத்துக்களில் தங்களுக்குரிய 1/3 பங்கினை பிரிவினை செய்து தர கேட்டதில் 1, 2 பிரதிவாதிகள் பிரிவினை செய்து தருவதாக கூறி வீண் காலதாமதம் செய்து வந்தார். இந்நிலையில் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள், 1ம் பிரதிவாதிக்கு தாவா தபசில் சொத்துக்களை பொறுத்து பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்திருப்பதாக தெரியவந்தது. மேற்படி பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம் வாதிகளின் 1/3 பாகத்தினை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை.

2.3. வாதிகள் 1, 2 பிரதிவாதிகளிடம் தாவா தபசில் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து தரவேண்டியதில் 1, 2 பிரதிவாதிகள் தாவா தபசில் சொத்துக்களை பிரிவினை செய்துதர மறுத்துவிட்டனர். 1, 2 பிரதிவாதிகளுடன் ,3 4 பிரதிவாதிகள் மோசடியான முறையில் வஞ்சகக்கூட்டு சேர்ந்துகொண்டு தாவா தபசில் சொத்துக்களை பொறுத்து சட்டத்திற்கு விரோதமான முறையில் ஆவணங்களை உற்பத்தி செய்த காரணத்தினால் 3, 4 பிரதிவாதிகளும் மேற்படி வழக்கில் அவசிய கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே இந்த வழக்கு தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 1/3 பாகத்தை நயமிதம் பார்த்து பிரித்து வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க கோரியும், பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுளது.

## 3. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-

வாதிகள், வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானது. உண்மையில் தாவா தபசில் சொத்துக்கள் மேற்படி கிருஷ்ணசாமி நாயக்கரின் சுயார்ஜித சொத்துக்களாகும். கிருஷ்ணசாமி நாயக்கர் கடந்த 10.06.2001 இல் காலமானார். அதன் பின்பு பெருமாள்சாமி நாயக்கர் 2002 லும், மேற்படி கிருஷ்ணம்மாள் 08.07.2015 லும் இறந்துபோனார்.

வாதிகளும்,1 ,2 பிரதிவாதிகளும் தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வரவில்லை. வாதிகளுக்கு தாவா தபசில் சொத்தில் 1/3 பங்கு கிடைக்ககூடியதில்லை.

3.2. தாவா 7 வது அயிட்ட சொத்தான புல எண்.119/12 பி1 ல் வடமேல் மூலையிலும், தெற்கில் மூலையிலும் இரு எடுப்பு நிலங்களாக 1 ம் பிரதிவாதிக்கு 6 செண்டு நிலம் மட்டுமே உண்டு. மீதி 7 செண்டு நிலம் வெங்கடாசல அப்பாசாமி குமாரர் சுப்பாராஜ் (1), ராஜசேகர் (2) என்பவர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி சொத்தை பொறுத்து வெங்கடாசல அப்பாசாமி பெயரில் கூட்டுபட்டா எண்.686 உள்ளது. எனவே சுப்பாராஜ்(1), ராஜசேகர் (2) ஆகியோர்கள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் ஆவார்கள்.

3.3. தாவா 2 வது அயிட்ட சொத்தான புல எண்.13/1 ல் உள்ள சொத்தும் வேறு சொத்துக்களும் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு 23.06.1953 ஆம் தேதிய பதிவு நன்கொடை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதது. தாவா 3 வது அயிட்ட சொத்தான புல எண்.146/1 ல் உள்ள சொத்து 26.05.1953 ஆம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. 1 ம் பிரதிவாதியுடன் பிறந்த பெருமாள்சாமி என்பவர் பஞ்சாயத்தார் முன்னிலையில் 29.07.1994 இல் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பாகவிடுதலை செய்து கொடுத்திருந்தார். வாய்மொழி குடும்ப ஏற்பாட்டில் தபசில் சொத்து செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் பங்குக்கு தனித்து விடப்பட்டிருந்தது. மேற்படியார் தாவா தபசில் சொத்துக்களை 29.03.2012 ஆம் தேதிய பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார். அதனை ஏற்று 1 ம் பிரதிவாதி தாவா தபசில் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்.

3.4. தாவா 1 வது அயிட்ட சொத்துக்கு 1 ம் பிரதிவாதி பெயரில் நத்தம் நிலவரிதிட்டத்தில் தனிப்பட்டா 85 கொடுக்கப்பட்டு அதற்கு சொத்துவரி, மின்கட்டண வரி செலுத்தி 1 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். தாவா 3 வது அயிட்ட சொத்தை 1 ம் பிரதிவாதி, 4 ம்

பிரதிவாதிக்கு 2016 ஆம் வருட வாக்கில் விற்பனை செய்து அவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது. அதேபோல் 1ம் பிரதிவாதி தாவா 4 வது அயிட்ட சொத்தை 3 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து தற்போது 3 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. எனவே வாதிகளின் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை மற்றும் 1, 4 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கின் தீர்வுக்காக கடந்த **30.06.2021** அன்று கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**எழுவினாக்கள்:**

1. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/3 பாகம் உரிமை உள்ளதா?
2. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

5. இன்று இவ்வழக்கானது தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் மேற்கண்ட எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்:**

1. வாதிகளின் தந்தை பெருமாள்சாமி தபசில் சொத்துக்களில் தனக்குள்ள உரிமையை பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டாரா?
2. 29.03.2012 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது மற்றும் வாதிகளை கட்டுப்படுத்துமா?

3. வாதிகளுக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு கிடைக்கத்தக்க பாகம் எவ்வளவு?
4. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

6. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், வழக்கு 2ம் வாதி மோகனகிருஷ்ணன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.1, 1ம் பிரதிவாதியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி சுப்பாராஜ் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

7. வாதிகள் தரப்பில். தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், வாதிகளின் முன்பாத்தியஸ்தரான கிருஷ்ணசாமி நாயக்கருக்கு, பெருமாள்சாமி நாயக்கர், மாரிச்சாமி, 1, 2 பிரதிவாதிகள், வெங்கடசாமி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்றும், அதில் மாரிச்சாமி, வெங்கடசாமி ஆகியோர்கள் திருமணம் செய்யாமல் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டனர் என்றும், மேற்படி கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் அவரது மனைவி, வாதிகளின் தந்தை பெருமாள்சாமி , 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டனர் என்றும், மேலும் பெருமாள்சாமி வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால் தபசில் சொத்துக்களில் வாதிகளின் தந்தை பெருமாள்சாமிக்கு கிடைக்கக்கூடிய 1/3 பங்கு வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் தந்தை கடந்த 29.07.1994 ஆம் தேதியன்று அவரது தாயார் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பூர்வீக

சொத்துக்களை பொருத்து பாக விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், பாக விடுதலை ஆவணத்தில் உள்ள கையொப்பம் மட்டுமே வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் சட்டப்படியான ஆவணமாக கருதமுடியாது என்று Perumal Vs V.Balasubramanian 2011(5) CTC 416 எனும் வழக்கினை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது. மேலும் தபசில் 7 வது அயிட்ட சொத்தில் 6 செண்ட் மட்டுமே 1 ஆம் பிரதிவாதிக்கு உள்ளது என்றும், மீதமுள்ள 7 செண்ட் நிலம் வெங்கடாசல அப்பாசாமி குமாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு அவசியமான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டாலும், மேற்படி வெங்கடாசல அப்பாசாமி வாரிசுகள் இந்த வழக்கின் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் பங்குரிமையாளர்கள் கிடையாது என்பதால் அவர்கள் இந்த வழக்கினை தீர்மானிப்பதற்கு அவசியமான தரப்பினர்கள் கிடையாது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் 29.03.2012 ஆம் தேதியன்று 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செட்டில்மெண்ட் ஆவணமானது பொது குடும்ப சொத்தினை பொருத்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், மேலும் மேற்படி ஆவணம் செயல்பாட்டிற்கு வந்துவிட்டடதாக 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித வருவாய்துறை ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் மேற்படி பிரிவினை செய்யப்படாத சொத்தினை பொருத்து பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் தபசில் 4 வது அயிட்ட சொத்தை 3 ஆம் பிரதிவாதிக்கும், பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் தபசில் 3 வது அயிட்ட சொத்தை 4 ஆம் பிரதிவாதிக்கும் தபசில் சொத்தினை பொருத்து 1 ஆம் பிரதிவாதி செய்து கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி ஆவணத்தின் மூலம் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குள்ள 1/3 பங்கு பாகம் பாதிக்கப்படாது என்றும், தபசில் சொத்துக்கள் இந்து பொது குடும்ப சொத்துக்கள் என்பதால், வாதிகளுக்கு தபசில் சொத்துக்களில் 1/3 பங்கு பாகம் வழங்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் தந்தையான பெருமாள்சாமி நாயக்கர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் 29.07.1994 ஆம் தேதியன்று அவரது தாயாரான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு சொத்துக்களை பொருத்து பாக விடுதலை செய்து கொடுத்துவிட்டதால் தற்போது வாதிகளுக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், மேலும் 2 வது மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்கள் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் என்பவரால் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும் என்றும், மேலும் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு அவரது கணவரான கிருஷ்ணசாமி நாயக்கர் இறந்ததற்கு பின்னிட்டு தபசில் சொத்துக்கள் கிடைக்கப்பெற்று மேற்படி சொத்துக்களை கடந்த 29.03.2012 ஆம் தேதியன்று 1 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றும், மேலும் தபசில் சொத்துக்களில் 7 வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளுக்கும், வெங்கடாசல அப்பாசாமி குமாரர்களான சுப்பாராஜ், ராஜசேகர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், ஆனால் மேற்படி நபர்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றும், எனவே வழக்கு அவசியமான தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு அவரது கணவர் கிருஷ்ணசாமி நாயக்கர் இறந்ததற்கு பின்னிட்டு சொத்துக்கள் கிடைக்கப்பெற்று தபசில் சொத்துக்களை பொருத்து 29.03.2012 ஆம் தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றும், தற்போது தபசில் 3 வது அயிட்ட சொத்தினை 4 ஆம் பிரதிவாதிக்கும், தபசில் 4 வது அயிட்ட சொத்தினை 3 ஆம் பிரதிவாதிக்கும் 1 ஆம் பிரதிவாதி கிரையம் எழுதி கொடுத்த சொத்துக்கள் மேற்படியார்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. **திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்.1 முதல் 3 க்கான தீர்வு:**

இந்த வழக்கானது, வாதிகளால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.2. வாதிகள் தரப்பு வழக்கு யாதெனில், தபசில் சொத்துக்கள் கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதும், கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பெருமாள்சாமி நாயக்கர், மாரிச்சாமி, 1, 2 பிரதிவாதிகள், வெங்கடசாமி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்பதும், மேற்படியார்களில் மாரிச்சாமி, வெங்கடசாமி ஆகியோர்கள் திருமணம் ஆகாமல் வாரிசுகள் இன்றி இறந்துவிட்டார்கள் என்பதும், மேலும் தபசில் சொத்துக்களை கிருஷ்ணசாமி நாயக்கர் அவரது மனைவி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள், வாதிகளின் தந்தை பெருமாள்சாமி நாயக்கர் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில் கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் அவரது மனைவி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள், பெருமாள்சாமி நாயக்கர் மற்றும் 1, 2 வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டனர் என்பதும், தற்போது பெருமாள்சாமி நாயக்கர் வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்ததற்கு பின்னிட்டு வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்பதும், எனவே தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு 1/3 பங்கு பாகமும், 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாகமும் உரிமையுள்ளது என்பதும், இந்நிலையில் தபசில் சொத்துக்களை பொருத்து செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் 1 ஆம் பிரதிவாதிக்கு மோசடியான முறையில் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதும், மேலும் 1 ஆம் பிரதிவாதி 3 வது அயிட்ட சொத்துக்களை 4 ஆம் பிரதிவாதிக்கும், 4 வது அயிட்ட சொத்துக்களை 3 ஆம் பிரதிவாதிக்கும் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதும், தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என்பதும் ஆகும்.

9.3. பிரதிவாதிகள் தரப்பு வழக்கு யாதெனில், வாதிகளின் தந்தையான பெருமாள்சாமி நாயக்கர் 29.07.1994 ஆம் தேதியன்று அவரது தாயாரான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு சொத்துக்களை பொருத்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் பாக விடுதலை செய்து கொடுத்துவிட்டதால் தற்போது வாதிகளுக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையும் கிடையாது என்பதும், மேலும் 2 வது மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்கள் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும் என்பதும், மேலும் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு அவரது கணவரான கிருஷ்ணசாமி நாயக்கர் இறந்ததற்கு பின்னிட்டு தபசில் சொத்துக்கள் கிடைக்கப்பெற்று மேற்படி சொத்துக்களை கடந்த 29.03.2012 ஆம் தேதியன்று 1 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்பதும், மேலும் தபசில் சொத்துக்களில் 7 வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளுக்கும், வெங்கடாசல அப்பாசாமி குமாரர்களான சுப்பாராஜ், ராஜசேகர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும், ஆனால் மேற்படி நபர்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதும், எனவே வழக்கு அவசியமான தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும், மேலும் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு அவரது கணவர் கிருஷ்ணசாமி நாயக்கர் இறந்ததற்கு பின்னிட்டு சொத்துக்கள் கிடைக்கப்பெற்று தபசில் சொத்துக்களை பொருத்து 29.03.2012 ஆம் தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்பதும், தற்போது தபசில் 3 வது அயிட்ட சொத்தினை 4 ஆம் பிரதிவாதிக்கும், தபசில் 4 வது அயிட்ட சொத்தினை 3 ஆம் பிரதிவாதிக்கும் 1 ஆம் பிரதிவாதி கிரையம் எழுதி கொடுத்து சொத்துக்கள் மேற்படியார்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பதும், ஆகும்.

9.4. மேற்படி வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கின் பரிசீலனையிலிருந்து கிருஷ்ணசாமி நாயக்கரின் மனைவி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள்

என்பதும், மேற்படியார்களுக்கு பெருமாள்சாமி நாயக்கர், மாரிச்சாமி, 1, 2 பிரதிவாதிகள், வெங்கடசாமி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆவார்கள் என்பதும், அதில் மாரிச்சாமி, வெங்கடசாமி ஆகியோர்கள் வாரிசுகள் இன்றி திருமணம் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டனர் என்பதும், மேலும் கிருஷ்ணசாமி நாயக்கர், அவரது மனைவியான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள், பெருமாள்சாமி நாயக்கர் மற்றும் 1, 2 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டனர் என்றும், மேலும் பெருமாள்சாமி நாயக்கர் 1, 2 வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டனர் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதியாகும்.

**<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.1 சம்மந்தமாக</u>**

9.5. வாதிகள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ள நிலையில், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், வாதிகளின் தந்தையான பெருமாள்சாமி கடந்த 29.07.1994 ஆம் தேதியன்று தபசில் சொத்துக்களில் தனக்குள்ள உரிமையை அவரது தாயாரான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளதால் இந்த வழக்கில் முதன்மையாக தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் வாதிகளின் தந்தை தபசில் சொத்துக்களில் தனக்குள்ள உரிமையை பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டாரா என்பதேயாகும்.

9.6. வாதிகளின் தந்தை பெருமாள்சாமி கடந்த 29.07.1994 ஆம் தேதியன்று குடும்ப சொத்துக்களில் அவருக்குள்ள பாகத்தினை அவரது தாயாரான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில், வா.சா.1 குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது 29.07.1994 ஆம் தேதிய பாகவிடுதலை ஆவணத்தில் கண்டுள்ள வாதிகளின் தந்தையின் கையொப்பம் மட்டும் பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகவிடுதலை ஆவணமானது வாதிகளின் தந்தை பெருமாள்சாமி என்பவரால் அவரது தந்தை கிருஷ்ணசாமி நாயக்கருக்கு சொத்துக்களை

பொருத்து பாகவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி பாகவிடுதலை ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல. எனவே மேற்படி 29.07.1994 ஆம் தேதிய பாகவிடுதலை ஆவணத்தின்படி வாதிகளின் தந்தை பெருமாள்சாமி சொத்துக்களில் உள்ள உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக கருதமுடியாது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மேலும் வாதிகள் தரப்பில் மேற்படி பாகவிடுதலை ஆவணத்தின் முதல் பக்கத்தில் உள்ள வாதிகளின் தந்தையின் கையொப்பம் மட்டுமே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மட்டும் வாதிகளின் தந்தை தபசில் சொத்துக்களை பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்பதனை ஒப்புக்கொண்டுவிட்டார் என்று முடிவுக்கு வரமுடியாது. மேலும் பாகவிடுதலை ஆவணத்தை நிரூபிக்கும் பொருட்டு பாகவிடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகள் யாரும் பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. எனவே பாகவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது முறைப்படி 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவிலலை.

9.7. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிகளின் தந்தை பெருமாள்சாமி தபசில் சொத்துக்களில் தனக்குள்ள உரிமையை பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.2 சம்மந்தமாக**

9.8. அடுத்ததாக கிருஷ்ணசாமி நாயக்கரின் மனைவியான செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் வா.சா.ஆ.3, 29.03.2012 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1 ஆம் பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளது செல்லத்தக்கதா என்பதை பரிசீலனை செய்கையில் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களானது செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு அவரின் கணவரின் மூலமாகவும், வாதிகளின் தந்தை பெருமாள்சாமி 27.09.1994 இல் பாகவிடுதலை செய்து கொடுத்ததன் அடிப்படையிலும், மேலும் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளின் மகனிடமிருந்து பாகவிடுதலை பெற்றுள்ளதன் அடிப்படையிலும்,

கிடைக்கப்பெற்றதாக கண்டுள்ளது. ஆனால் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி பாகம் எப்போது நடைபெற்றது என்பது பற்றி எவ்வித வாதுரையும் செய்யப்படவில்லை. மேலும் வாய்மொழி பாகம் நடைபெற்றதை நிரூபிக்கும் வகையில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே வாய்மொழி பாகத்தில் தபசில் சொத்துக்கள் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மேலும் மேலே கண்ட பத்தியில் வாதிகளின் தந்தை பெருமாள்சாமி 29.07.1994 ஆம் தேதிய ஆவணத்தின் மூலம் பாக விடுதலை செய்து கொடுத்தார் என்பது நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே தபசில் சொத்துக்கள் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பாகவிடுதலை ஆவணத்தின் அடிப்படையிலும், வாய்மொழி பாகத்தின் அடிப்படையிலும் கிடைக்கப்பெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.2 , 23.06.1953 ஆம் தேதிய நன்கொடை ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தபசில் 2 வது மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்களானது செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் 2 மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்கள் மட்டும் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. மற்ற தபசில் சொத்துக்களான 1, 3, 4, 5, 7 அயிட்ட சொத்துக்களில் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு தனிப்பட்ட பாத்தியம் உள்ளது என்பதாக 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே தபசில் 2, 6 அயிட்ட சொத்துக்களை தவிர்த்து மற்ற தபசில் சொத்துக்களை பொருத்து செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

## திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.3 சம்மந்தமாக

**9.9.** தபசில் சொத்துக்களை பொருத்து வாதிகளின் தந்தை பெருமாள்சாமி பாகவிடுதலை செய்து கொடுத்தார் என்பது நிரூபிக்கப்படவில்லை என்பதால் கிருஷ்ணசாமி

நாயக்கரின் வாரிசுகளான வாதிகளின் தந்தை பெருமாள்சாமி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பொது குடும்ப சொத்தில் தலா 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கதாகும். எனவே பெருமாள்சாமிக்கு கிடைக்கத்தக்க பாகம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்பதால் வாதிகளுக்கு பொது குடும்ப சொத்துக்களில் 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.10. தற்போது தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதா என்பதை பரிசீலனை செய்கையில், முதலாவதாக தபசில் 1வது அயிட்ட சொத்தானது கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் 1வது தபசில் சொத்தானது கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை. மேலும் 1வது தபசில் சொத்தானது கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே தபசில் 1வது அயிட்ட சொத்தானது கிருஷ்ணசாமி நாயக்கரின் தனிப்பட்ட சொத்து என்பதோ, பொது குடும்ப சொத்து என்பதோ நிரூபிக்கப்படவில்லை என்பதால் தபசில் 1வது அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.11. அடுத்ததாக, தபசில் 2 வது மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்களை பொருத்து வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதா என்பதை பரிசீலனை செய்கையில், மேற்படி தபசில் 2 வது மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்கள் செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாளுக்கு பி.வா.சா.ஆ.2, நன்கொடை ஆவணத்தின் மூலம் தனிப்பட்ட பாத்தியம் உள்ளது என்பதாலும், மேலும் மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் அவருக்கு உரிமை உள்ள மேற்படி சொத்தினை வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டதாலும், மேலும் மேற்படி வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணமானது தபசில் 2 மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்களை பொருத்து செல்லத்தக்கது என மேலே கண்ட பத்திகளில்

தீர்மானிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், தபசில் 2 மற்றும் 6 வது அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.12. அடுத்ததாக தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களை பொருத்து பரிசீலனை செய்கையில் தபசில் சொத்துக்கள் வாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டும் வகையில் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்கள் கிருஷ்ணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டதல்ல என்பது நிரூபிக்கப்படவில்லை. மேலும் மேலே கண்ட பத்தியில் 1 ஆம் பிரதிவாதிக்கு மேற்படி செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களை பொருத்து வாதிகளை கட்டுப்படுத்தாது என தீர்மானித்துள்ள நிலையில் மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல. எனவே தபசில் 3 வது அயிட்ட சொத்துக்களை பொருத்து 4 ஆம் பிரதிவாதிக்கு 1 ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.8 கிரைய ஆவணமும், தபசில் 4 வது அயிட்ட சொத்துக்களை பொருத்து 1 ஆம் பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் மேற்படி பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.13. அடுத்ததாக தபசில் 7 வது அயிட்ட சொத்தை பொருத்து வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 பட்டாவானது கூட்டு பட்டாவாக கிருஷ்ணசாமி நாயக்கருக்கும், வெங்கடாசல அப்பாசாமி நாயக்கருக்கும் பாத்தியப்பட்டதாக கண்டுள்ள நிலையில், மேற்படி 7 வது தபசில் சொத்தை பொருத்து வாதிகளுக்குள்ள பாகத்தை பொருத்து தீர்மானிக்க

வெங்கடாசல அப்பாசாமி வாரிசுதாரர்கள் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள் என்பதால் தபசில் 7 வது அயிட்ட சொத்தை பொருத்து கோரப்பட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.14. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தபசில் சொத்துக்களை பொருத்து வாதிகளின் தந்தை பெருமாள்சாமி பாகவிடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும், தபசில் 2, 6 அயிட்ட சொத்துக்களை தவிர்த்து மற்ற தபசில் சொத்துக்களை பொருத்து செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3, 29.03.2012 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தபசில் 1, 2, 6, 7 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றும் தீர்மானித்து திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 முதல் 3 க்கு விடையளிக்கப்படுகிறது.

## 10. <u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினா .4 க்கான தீர்வு</u>

தபசில் 1, 2, 6, 7 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என மேலே கண்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 முதல் 3 இல் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், செலவுத் தொகை உட்பட வேறு இதர பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்கு வழங்கத் தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இவ்வெழுவினாவுக்கு தீர்வு காணப்படுகிறது.

**11.** **இறுதியாக,** இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(i) தபசில் 1, 2, 6, 7 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது.

(ii) தபசில் 3, 4, 5 அயிட்ட சொத்துக்களில் மட்டும் வாதிகளுக்கு 1/3 பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(iii). தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு, இவ்வழக்கின் செலவுத் தொகையை அந்தந்த தரப்பினர்களே ஏற்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 04-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.04 19:42:13 -0600

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள்:**

1. திரு.மோகனகிருஷ்ணன் (2 ம் வாதி)

**2. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:**

1. திரு.சுப்பாராஜ் (1 ஆம் பிரதிவாதி)

**3. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | ---- | கொடிவழி ஜாபிதா |
| வா.சா.ஆ.2 | ---- | பிராது தபசில் சொத்துக்களுக்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.3 | 29.03.2012 | ஆம் தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 29.07.1994 | பொது பாகபாத்திய விடுதலை ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 23.06.1953 | தாவா 2 வது அயிட்ட சொத்தினை பொருத்து செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் பெயரிலுள்ள நன்கொடை ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 26.05.1953 | தாவா 3 வது அயிட்ட சொத்தினை பொறுத்து கிருஷ்ணசாமி நாயக்கர் பெரிலுள்ள பதிவு கிரைய ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 10.06.2001 | கிருஷ்ணசாமி நாயக்கரின் இறப்பு சான்று |
| பி.வா.சா.ஆ.5 | 29.03.2012 | செல்லத்தாய் என்ற கிருஷ்ணம்மாள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் அசல் |
| பி.வா.சா.ஆ.6 | --- | தாவா 1 வது தபசில் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெரிலுள்ள நத்தம் நிலவரித்திட்ட துாய சிட்டா |
| பி.வா.சா.ஆ.7 | 22.07.2015 | 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் |
| பி.வா.சா.ஆ.8 | 14.07.2016 | 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.04 19:42:23 -0600

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.206/2019**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 04.06.2026**